பக்கங்கள்: 08 விலை: 20/=

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 24 புதன்கிழமை 08.07.2020 கதிர் 110

# யாழ்.செயலகம் முன்பாக அலுவலர் மீது வாள்வெட்டு!



## பலத்த பாதுப்புக்கு மத்தியில் இன்று காலை துணிகரம்

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 08

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் உள்ள யாழ். தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகம் (மாவட்ட செயலகம்) முன்பாக மாவட்ட செயலக உத்தியோகஸ்தர் மீது இனம் தெரியாதவர்களால் வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் மல்லாகத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் பிரகாஷ் என்ற சுற்றுச்சூழல் அதிகார சபை பிரிவின் உத்தியோகஸ்தர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அவரது மோட்டார் சைக்கிளும் சேதமாக்கப்பட்டுள்ளது.

2

## மற்றுமொரு பொலிஸ் அதிகாரி கைது!

கொழும்பு, ஜூலை 08

போதைப்பொருள் வர்த்தகர்களுடன் தொடர்பில் இருந்த சந்தேகத்தின் பேரில் 17 ஆவது சந்தேகநபர் ராகம பகுதியில் வைத்து குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் இன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

2

வெடிவிபத்தில் படுகாயமுற்ற

## முன்னாள் போராளி உயிரிழப்பு!



கிளிநொச்சி, ஜூலை 08

இயக்கச்சிப் பகுதியில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவமொன்றில் படுகாயமடைந்து அனுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த முன்னாள் போராளி உயிரிழந்தார்.

2

## புதிய அரசமைப்பை உருவாக்க ஆணை கேட்கின்றார் பஸில்

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக பொதுத் தேர்தலில் உறுதியான அதிகாரத்தை வழங்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளரான முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



கட்சித் தலைமையகத்தில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

2

# தமிழரின் உரிமைகளை நிராகரிக்கவே முடியாது!



## லக்ஸ்மன் யாப்பாவுக்கு சம்பந்தன் தக்க பதிலடி

திருமலை, ஜூலை 08

தமிழ் மக்கள் ஒரு நீண்டகால கலாசாரத்தையும் பாரம்பரியத்தையும் பின்பற்றி வருகின்றார்கள். அந்தவகையில் அவர்களின் உரிமைகளை எவரும் நிராகரிக்கவே முடியாது. இதனை மிகவும் உறுதியாக வலியுறுத்த விரும்புகின்றோம்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

2

## சிறைக் கைதிகளை பார்வையிடத் தடை!

கொழும்பு, ஜூலை 08

நாட்டில் உள்ள அனைத்துச் சிறைச்சாலைகளிலும் கைதிகளைப் பார்வையிட மறு அறிவித்தல் வரை தடை விதிக்கப்பட்டுள்ளது.

கைதிகள் மற்றும் சந்தேக நபர்களைப் பார்வையிட சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தலுக்கு அமைய எவருக்கும் அனுமதி வழங்கப்படாதுஎனச்சிறைச்சாலைகள் ஆணையாளர்

2

## நியாயமான தேர்தலுக்கு பொலிஸார் ஒத்துழைப்பர்

யாழ்ப்பாண டி.ஐ.ஜி. தெரிவிப்பு



(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 08

எதிர்வரும்நாடாளுமன்றத்தேர்தலைச் சுயாதீனமாகவும் நியாயமாகவும் நடத்துவதற்குப் பொலிஸாரின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும் என்கிறார்

2

## சிவாஜிக்கு எதிரான மனு இன்று நிராகரிப்பு

(எஸ். நிதர்ஷன்)

நாளை நடைபெறவுள்ள நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயப் படுகொலைநினைவேந்தல் நிகழ்வுக்குச் செல்வதற்கு எம்.கே.சிவாஜிலிங்கத்துக்கு தடை விதிக்க வேண்டும் என்று கோரி மானிப்பாய் பொலிஸார் முன்வைத்த கோரிக்கையை மல்லாகம் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இன்று நண்பகல் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போதே இந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளை மீள உருவாக்க முற்படுகின்றமை,

2

## கஞ்சாவோடும், கொரோனாவோடும் வடக்கில் போராடுகின்றது கடற்படை!

பேச்சாளர் இசுறு சூரியபண்டார தெரிவிப்பு

(எஸ். நிதர்ஷன், ந.லோகதயாளன்)



வடக்கில் போதைப் பொருள், மற்றும் கொரோனாத் தொற்றுக்கு எதிராகக் கடற்படையினர் போராடவேண்டிய நிலை காணப்படுவதாகக் கடற்படை ஊடகப் பேச்சாளர் இசுறு சூரியபண்டார தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறை கடற்படைத் தளத்தில் ஊடகவியலாளர்களுடன் கலந்துரையாடிய போதே அவர் இதனைக் கூறினார்.

2



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## யாழ்.செயலகம்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

இந்த உத்தியோகஸ்தர் வழமை போன்று இன்று காலை கடமைக்காக வந்தபோது, அவரைப் பின் தொடர்ந்து இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த நால்வர் மாவட்ட செயலக வாயிலுக்கு அருகில் வழிமறித்து அவர் மீது தாக்கு தலை மேற்கொண்டுள்ளனர்.

கையில் வாள் வெட்டுக் காயத்துக்கு இலக்கான உத்தியோகஸ்தர் பாது காப்புத் தேடி மாவட்ட செயலகத்தினுள் ஓடியுள்ளார்.

இதன்போதும், இருவர் அவரைப் பின் தொடர்ந்து மாவட்ட செயலக வளா கத்தினுள் புகுந்தும் தாக்குதலை மேற் கொண்டமையுடன், வெளியில் வந்து, அவரது மோட்டார் சைக்கிள் மீதும் தாக் குல் மேற்கொண்டு அதனைச் சேத மாக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கான உத்தி யோகஸ்தர் யாழ்.போதனா வைத்தி யசாலையில் சிகிச்சைக்காக அனும திக்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலை முன் னிட்டு மாவட்ட செயலகத்தில், தெரிவத் தாட்சி அலுவலகமும் செயற்பட்டு வரு கின்றது.

வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்ட நாளில் இருந்து மாவட்ட செயலகம் தெரிவத்தாட்சி அலுவலகம் எனும் ரீதி யில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத் தப்பட்டு இருந்தன.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நடந்த இந்த தாக்குதல் பலரையும் அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸார் விசாரணைகளை முன்னெ டுத்துள்ளனர்.

## புதிய அரசமைப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கை யில் –

நாட்டுக்குப் பொருத்தமான புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டும்.

ஒவ்வொருவரின் அழுத்தத்திற்கும் அடிபணிந்து ஒவ்வொரு பகுதியை இணைக்காமல், நாட்டுக்கு பொருத்த மான அரசமைப்பை உருவாக்குவதற்கு உறுதியான அதிகாரம் வேண்டும்.

இல்லாவிட்டால், அரசமைப்பு உரு வாக்கத்தின்போது ஒவ்வொருவரின் பணயக் கைதிகளாக வேண்டிவரும் எனபஸில்ராஜபக்ஷதெரிவித்துள்ளார்.

## நியாயமான ...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

யாழ் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதி பர்.

யாழ்ப்பாண மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் தலைமையில் யாழ். மாவட்ட செயலகத்தில் நடந்த கூட்டத்தில் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறி னார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்த லைச் சுயாதீனமாகவும் நியாயமாகவும் நடத்துவதற்குத் தேர்தல் திணைக் களத்துடன் இணைந்து பொலிஸார் செயற்படுவதற்குத் தயாராக இருக்கின் றோம்.

அதாவது மாவட்ட உதவித் தேர்தல் அலுவலகத்தால் வழங்கப்படும் பணிப் புரைக்கமைய எமது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக மாவட்ட பொலி ஸாருக்கு என்னால் அறிவுறுத்தப்பட் டுள்ளது.

அதேபோல் நாங்கள் தற்போது சட்ட விரோதமாக ஒட்டப்பட்டுள்ள சுவரொட் டிகள், தேர்தல் விளம்பரப் பதாதைகள் அகற்றல் மற்றும் தேர்தல் வன்முறை யோடு சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெ டுத்து வருகின்றோம். அதற்கென நிய மிக்கப்பட்ட பொலிஸ் அணியினால் அது தொடர்ச்சியாக முன்னெடுக்கப் படும்

அதேபோல் பொலிஸ் தலைமை யகத்தினாலும் சில அறிவுறுத்தல்கள் எமக்கு வழங்கப்பட உள்ளன. எனினும் எதிர்வரும் தேர்தலை சுயாதீனமாகவும் நியாயமானதாகவும் நடத்துவதற்கு யாழ். மாவட்ட செயலகத்தோடு பொலி ஸார் முழு ஒத்துழைப்பையும் வழங்கத் தயாராக உள்ளனர். இந்த விடயம் தொடர்பில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சி யைச் சார்ந்தவர்களுக்கும் மாவட்ட செயலகத்தினால் பல அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே தேர்தலை நடத்துவதற்கு அனைவரின் ஒத்துழைப் பும் அவசியம் – என்றார்.

## மற்றுமொரு....

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

போதைப்பொருள் ஒழிப்புப் பணிய கத்தின் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒரு வரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள் ளார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சா ளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள் ளார்.

## தமிழரின் உரிமைகளை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்களுடைய தேசிய பிரச் சினை தொடர்பில் முன்னாள் இரா ஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேயவர்தன தெரிவித்த கருத்துக்கு இரா.சம்பந்தன் இன்று வெளியிட்டுள்ள பதில் அறிக்கையிலேயே மேற்கண்ட வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:-

தமிழ் பேசும் மக்களுடைய பிரச் சினை விசேடமாக தமிழ் மக்களுடைய பிரச்சினை நாடு சுதந்திரமடைந்த காலம் முதற்கொண்டு நீடித்து வருகின்றது.

1956ஆம் ஆண்டு தொடக்கம் சகல தமிழ் அரசியல் கட்சிகளும் இந்த நாட் டில் ஆட்சி முறையில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதற்காக ஜனநாயக ரீதி யான கோரிக்கைகளை வைத்து தமிழ் மக்கள் தங்களுடைய ஏகோபித்த ஆத ரவை அந்தக் கட்சிகளுக்கும் கொள் கைகளுக்கும் வழங்கி வந்துள்ளார்கள்.

ஐக்கிய நாடுகள் சபையில் நிறை வேற்றப்பட்ட சர்வதேச மனித உரிமை கள் பிரகடனத்தின் அடிப்படையில், ஒரு மக்களை ஆட்சி புரிவதற்கு ஜனநாயக ரீதியாக அந்த மக்களுடைய சம்மதமும் இணக்கமும் பெறப்பட வேண்டும். அதனடிப்படையில் 1956ஆம் ஆண்டு தொடக்கம்தமிழ்மக்களால்வழங்கப்பட்ட ஜனநாயக ரீதியான தீர்ப்புகள் மதிக் கப்படவேண்டும். அதுஎன்னவென்றால், ஆட்சி முறையில் மாற்றம் ஏற்பட்டு அதி யுச்ச அளவில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக் கப்பட்டு மக்கள் தங்களுடைய கருமங் களைக் கையாளக்கூடிய அரசியல் சாசன ரீதியாக உலகத்தில் பல நாடு களில் நிலவுகின்று போல் ஒரு ஆட்சி முறை ஏற்பட வேண்டும் என்பதே. இதனை எவராலும் உதாசீனம் செய்ய முடியாது.

இலங்கை அரசின் சம்மதத்துடன் ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற் றப்பட்ட அரசியல் குடியியல் உரிமை களின் அடிப்படையிலும், பொருளாதார சமூக கலாசார உரிமைகளின் அடிப் படையிலும் ஒரு மக்கள் குழாமுக்கு உள் ளக சுயநிர்ணய உரித்து உள்ளது. இவையெல்லாவற்றையும் இலங்கை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

இவற்றை நிறைவேற்ற வேண்டியது இலங்கை நாட்டினதும் அரசினதும் கடமையாகும். இவை மறுக்கப்படுகின்ற போது விளைவுகள் பாதகமாக அமை யலாம்.

ஒரு நீண்டகால கலாசாரத்தையும் பாரம்பரியத்தையும் பின்பற்றி வருகின்ற தமிழ் மக்களுடைய உரிமைகள் எவராலும் இலகுவாக நிராகரிக்கப்பட முடியாதவையாகும். இதனை மிகவும் உறுதியாக வலியுறுத்த விரும்புகின் றோம் – என்றுள்ளது.

## வெடிவிபத்தில் படுகாயமுற்ற....

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

அதிகமானதீக்காயங்கள் இந்த உயிரிழப் புக்குக்காரணமெனச்சொல்லப்படுகிறது.

இதேவேளை, கிளிநொச்சி பளைப் பகுதியில் வெடிப்புச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் குறிப்பிட்டு, மேலும் இருவர் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பளை, இயக்கச்சியில் கடந்த 3ஆம் திகதி வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது. சி – 4 வெடிமருந்தை பயன்படுத்தி உள் ளூர் வெடிகுண்டு தயாரிக்க முயன்ற நிலையில், அதுதவறுதலாகவெடித்ததில், குண்டு தயாரித்தவர் காயமடைந்தார். அவர் அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், பயங்க ரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய் யப்பட்டிருந்தார். சிகிச்சை பலனளிக் காமல் அவர் உயிரிழந்தார்.

அதேசமயம் தடயங்களை அழிக்க முயன்றமைஉள்ளிட்டகுற்றங்களுக்காக அவரது மனைவி கைது செய்யப்பட்டி ருந்தார்.

இந்த நிலையில் மேலும் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நேற்று முன் தினம் இரவுவட்டக்கச்சிப்பகுதியில்வைத்து, இராமநாதபுரம் பகுதியை சேர்ந்த இரத்தி னசிங்கம் கமலாகரன் (வயது – 40) என்ற 3 பிள்ளைகளின் தந்தையைக் கைது செய்தனர். முன்னாள் போராளியான அவர், சிவில் பாதுகாப்புத் திணைக்களத் தில் பணிபுரிந்து வந்தார்.

காயமடைந்தவருடன் தொடர்பைப் பேணிய குற்றச்சாட்டில், அளவெட்டியைச் சேர்ந்த வைத்திலிங்கம் நிர்மலதாஸ் (வயது – 38) என்பவர் கொடிகாமத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்குட்படுத் தப்பட்டு வந்த இருவர் பிணையில் விடு விக்கப்பட்டனர். காயமடைந்தவருடன் தொலைபேசியில் பேசினார்கள் என்ற குற்றச்சாட்டில் கைதான பெண் உள்ளிட்ட இருவரே விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நடத்தப்பட்ட விசார ணையில் கரும்புலிகள் தினத்தில் வெடிப்பு சம்பவம் ஒன்றை நடத்தத் திட்ட மிட்ட தகவல் வெளியானதாக, பாதுகாப்பு தரப்பினர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

## சிறைக் கைதிகளை...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

குறிப்பிட்டுள்ளார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் கைதி ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளதாக அறிவிக்கப்பட்ட நிலையில் அந்த சிறைச்சாலையி லுள்ள 300 கைதிகளிடம் பி.சி.ஆர் மாதிரிகள் பெறப்பட்டன.

அவர்களில் 210 பேருக்கு தொற்று இல்லை என அறிக்கை கிடைத்துள் ளன. ஏனையோரது அறிக்கை இன் னும் வெளியாகவில்லை என்பது குறிப் பிடத்தக்கது.

## சிவாஜிக்கு எதிரான...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

சென்.பீற்றர்ஸ் தேவாலயத்துக்கு முன் பாக 150 இற்கும் அதிகமானவர்களைத் திரட்டி ஆர்ப்பாட்டம் செய்யவுள்ளமை போன்ற தகவல்கள் தமக்கு கிடைத் துள்ளன எனத் தெரிவித்து மானிப்பாய் பொலிஸார் மல்லாகம் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்திருந்தனர்.

அதேவேளை, அவரை அங்கு செல் வதற்குத் தடை விதிக்கவேண்டும் என் றும் கோரியிருந்தனர்.

இந்நிலையில் இன்று நண்பகல் சட்டத்தரணி சிறிகாந்தாவுடன் எம்.கே. சிவாஜிலிங்கம் நீதிமன்றில் முன்னி லையானார்.

அங்கு சிவாஜிலிங்கம் மீதான குற்றச்சாட்டுதிட்டமிட்டுபுனையப்பட்டது என்று சட்டத்தரணி வாதாடினார்.

இதன்போது சிவாஜிலிங்கம் தொடர் பில் தமக்குப் புலனாய்வுத் தகவல் கிடைத்தது என்றும், அவர் தேங்காய் உடைத்து ஆர்ப்பாட்டம் செய்வுள் ளதாக அந்தத்தகவல் மேலும் தெரிவித் ததாகவும் பொலிஸ் தரப்பினர் நீதி மன்றில் தெரிவித்திருக்கின்றனர்.

இதனை சிவாஜிலிங்கம் தரப்பு சட்டத்தரணி முற்றாக நிராகரித்ததுடன், வழிபடுதல்என்பதுஒவ்வொருவருடைய தனிப்பட்ட உரிமை என்பதையும் சுட்டிக் காட்டினார்.

இதனை அடுத்து, பொலிஸாரின் கோரிக்கையை நிராகரித்த நீதிபதி, சிவாஜிலிங்கம் வழிபாட்டில் ஈடுபடுவது அவருடைய தனிப்பட்ட உரிமை என்று தெரிவித்து தடை செய்யும் கோரிக் கையை நிராகரித்தமையுடன், பொலி ஸார் குறிப்பிட்டமை போன்று ஆர்ப்பாட் டம் மேற்கொண்டால் கைது செய்வதற் கான நட வடிக்கையைப் பொலிஸார் முன்னெடுப்பர் என்றும் தெரிவித் துள்ளார்.

1995 ஆம் ஆண்டு சென்பீற்றர்ஸ் தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்த போது விமானக் குண்டுத் தாக்குதலில் 150 பேர் வரை கொல்லப்பட்டதன் இருபத்தியைந்தாவது நினைவு தினம் நாளை என்பது குறிப்பிடத்தக்கது.

## கஞ்சாவோடும்....

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கொரோனா காலப்பகுதியில் அமுல் படுத்தப்பட்ட ஊடரங்குச் சட்டம் நீக்கப் பட்ட பின்னர் வடக்குக் கடல்மார்க்கம் ஊடாகப் போதைப்பொருள் கடத்தல் மீண்டும் அதிகரித்துள்ளது.

கடற்படையினர் தற்போது உள்ள சூழ்நிலையில் வடக்கில் போதைப் பொருள் பாவனைக்கு எதிராகவும், கொரோனாத் தொற்றுக்கு எதிராகவும் போராடவேண்டிய நிலை உள்ளது.

நாட்டில் போதைப்பொருள் பாவ னையைக் கட்டுப்படுத்துவதற்கு கடற் படையினர் மற்றும் கடலோரக் காவற் படையினர் சிறந்த முயற்சிகளை எடுத்து வருகின்றனர். தற்போது இலங் கைக்குள் சட்டவிரோதமாக நுழைய முற்படும் சட்டவிரோதச் செயற்பாடுக ளுடன் தொடர்புடைய நபர்களினால் கொரோனா தொற்று பரவும் அபாயமும் உள்ளது.

இவற்றில் இருந்தும் போதைப் பொருள் கடத்தலில் இருந்தும் நாட்டைப் பாதுகாக்கவேண்டிய கடமை எங்க ளுக்கு உள்ளது. கடற்படைத்தளபதி மற் றும் ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைய இலங்கை கடற்பரப்பில் தற் போது கடற்படையினரின் சுற்றுக்காவல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவற்றின் மூலம் கஞ்சா, ஹெரோ யின் போதைப்பொருள்களை கட்டுப் படுத்த முடியும். அதேபோல் புலனாய்வு துறையினர், பொலிஸார் மற்றும் இரா ணுவத்தினரின் ஒத்துழைப்புடன் இவற்றை கட்டுப்படுத்துவதற்குரிய நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரப்ப டுகின்றன. அதே போல் நாட்டுக்குள் பிரவேசிக்கும் இலங்கை பிரஜைகள், மற்றும் வெளிநாட்டவர்கள் தொடர்பி லும் விமானப்படையினருடன் இணைந்து கடற்படையினர் கடமை யாற்றி வருகின்றனர்.

வடக்கு மக்களிடம் நான் ஒரு கோரிக் கையை முன்வைக்க விரும்புகின்றேன். உங்களுக்கும் சமூகப் பொறுப்பு அவசியமானது. போதைப் பொருள் கடத்தல் தொடர்பில் நீங்கள் விழிப்பாக இருக்க வேண்டும். போதைப் பொருள் கடத்தலை முறியடிக்கக் கடமையாற்றும் கடற்படை மற்றும் முப்படையினருக்கும் உதவி புரிவதன் மூலமே குறித்த போதைப்பொருள் கடத்தலைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரலாம். இந்தப் போதைப்பொருள் கடத்தல் தொடர்ச் சியாக இடம்பெறுமாக இருந்தால் வடக்கில் கொரோனா தொற்று மீண்டும் ஏற்பட அதிக வாய்ப்பு காணப்படுகின் றது. எனவே இந்த விடயத்தினை மக்களும் கருத்தில் எடுக்க வேண்டும் – என்றார்.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000

மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# நெருங்குகின்றது அரசியல் ஆபத்து

கடைசியாக கோணிப் பைக்குள் இருந்து பூனை வெளியே வந்து விட்டது. அதனை ஆங்கிலத்தில் Letting the cat out of the bag என்பார்கள்.

பொதுஜன பெரமுன கட்சியினர் - மஹிந்த தரப்பினர் - இந்தத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு கேட்பதின் நோக்கம் யாது என்பது தொடர்பிலான உண்மை இப்போது மெல்ல மெல்ல வெளியே வந்து விட்டது.

நாட்டுக்கு மிகப் பேராபத்தான ஓர் அரசியல் சூழல் கட்டவிழ்ப் போவதற்கான ஏது நிலைகள் சூழ்ந்து வருகின்றன. அதனைத் தமிழர்களும், மனித உரிமை ஆர்வலர்களும், சமூகச் சிற்பி களும் எப்படி எதிர்கொள்ளப் போகின்றனர் என்ற கேள்வி எழுந்திருக்கின்றது.

அதே நேரத்தில் இந்த விடயம் தமிழர் தரப்புக்கும் மிக மோசமான நெருக்கடிகளையும், பாதிப்புக்களையும், நிரந்தரப் பின்னடைவுகளையும் தரக் கூடிய சிக்கல் நிலையாகவும் தென்படுகின்றது.

ஆரம்பத்தில் அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தை மாற் றியமைப்பதற்காக நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைத் தாருங்கள் என்று கோரியது மொட்டுத் தரப்பு.

பின்னர் சுருதியை மாற்றி, 13 ஆவது திருத்தத்தையும் மாற்றியமைக்க வேண்டும், அதற்கும் சேர்த்து மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு நாடாளுமன்றத்தில் தேவை என்பது மஹிந்தரின் தரப்பு.

அதனைத்தான் '19 பிளஸ்' மட்டுமல்ல, '13 பிளஸ்' கூட மாற்றப்பட வேண்டும் என்று அறிவித்தார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

இதில் ஒரு மதிநுட்பமான அரசியல் சூட்சமம் - சூழ்ச்சி - கூடப் பொதிந்து கிடக்கின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தனித்துச் சிங்கள, பௌத்த வாக்குகளை மட்டும் இலக்கு வைத்துப் பிரசாரம் செய்து, அதில் பெரு வெற்றியீட்டியது மொட்டுக் கட்சி.

சிங்கள, பௌத்த பேரினவாதத்தைத் தூண்டி, விளாசி எரியும் அந்த இனவாத மேலாண்மைத் தீயில் அரசியல் குளிர் காய்வதுதான் ராஜபக்ஷக்களின் ஒரே திட்டம் என்பது வெளிப்படையான உண்மை.

இப்போதும் கூட அந்த இனவாத்தை நம்பித்தான் அரசியல் பிழைப்பு நடத்துகின்றது மொட்டுத் தரப்பு.

13 ஆவது திருத்தத்தை மாற்றுவது என்பது - மாகாணங்களுக் குப் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது உட்பட இதுவரை நடைமுறைக்கு வராத அரசமைப்புச் சட்ட ஷரத்துக்களை நீக்கு வது அல்லது மாற்றி அமைப்பது என்பது - தமிழர்களாகிய சிறுபான்மை இனத்துக்கு 13 ஆவது திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரப் பகிர்வை இல்லாமலாக்குவதுதான்.

ஆக, இப்போது தமிழர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரப் பகிர்வை, சட்டத்தில் - எழுத்தில் - இருக்கும் அதே நேரம் நடை முறைப்படுத்தப்படாமல் இருக்கும் ஷரத்துக்களை, நீக்கி, அகற்றி, சட்டப் புத்தகத்திலிருந்தே விலக்கப் போகின்றோம், அதற்கு ஆதரவு தாருங்கள் என்ற கோரிக்கையை சிங்கள மக்கள் மத்தியில் முன்வைப்பதன் மூலம் தெற்கில் பெருத்த ஆதரவைத் திரட்டுவதற்கு வியூகம் வகுத்துள்ளது பொதுஜ னப் பெரமுன.

வாக்குத் திரட்டும் நோக்குடனான பேரினவாத நடவடிக் கைகளின் உச்சக் கட்டமாக இந்தத் தந்திரோபாயம் கட்டவிழ் கின்றது.

இதன் அடுத்த நிலையாக, இதுவரை '19 பிளஸை' மாற் றுவோம், '13 பிளஸை' நீக்குவோம் என்று வாயடித்து வந்த மொட்டுக் கட்சியினர், இப்போது நாடாளுமன்றில் தமக்கு, மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிட்டுவதற்கு வாய்ப் புண்டு என்ற நம்பிக்கை சற்றுப் பிறந்ததும் புதிய கதை ஒன் றையும் அவிழ்த்து விடுகின்றனர்.

அது, 19 ஆவது திருத்தத்தை நீக்கி, 13 ஆவது திருத்தத்தை மாற்றி என்று மினக்கெடாமல் புதிய அரசமைப்பையோ உருக் குவது என்பதேயாகும்.

மொட்டுக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தான் இந்த விவகாரத்தை முதன் முதலில் வெளியிட்டிருக்கின் றார்.

19 ஆவது அரசமைப்புத் திருத்தம் மூலம் ராஜபக்ஷக்களை ஓரம் கட்டி ஒதுக்குவதற்கு வியூகம் வகுத்தார் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

இப்போது தமது விருப்புக்கும், எண்ணத்துக்கும், தேவைக் கும், இலக்குகளுக்கும் ஏற்ப நாட்டின் மீயுயர், சட்டமான அரச மைப்பையே முழுமையாக மாற்றியமைக்கத் தயாராகி விட் டனர் ராஜபக்ஷக்கள்.

நாட்டுக்கும், சிறுபான்மையினருக்கும் பேரழிவுக்கான ஆரம்ப அடித்தளம்தான் இது.

# மலையகத்தி பல்கலைக்கழகத்துடன் விவசாயக் கல்லூரி ஒன்றும் அமையும்

## ஜீவன் தொண்டமான் உறுதி தெரிவிப்பு



மலையகத்தில் விவசாயக் கல்லூரியொன்றை அமைப்பதற் கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் தெரிவித் தார்.

டிக்கோயா, தரவளை பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வரு மாறு:-

ஒரு காலத்தில் சௌமியமூர்த்தி தொண்ட மானை விமர்சித்தனர், அதன் பின்னர் எனது தந்தையை விமர்சித்தனர், இறந்த பின்புகூட அவரை விட்டுவைக்கவில்லை. இன்று என்னை விமர்சிக்கின்றனர். சின்ன பையன் கைகளில் மலையக தலைமைத்துவத்தை வழங்க முடி யுமா எனக் கேட்கின்றனர். இது குறித்து நான் கவலைப்படுவதில்லை. ஏனெனில் என்னை விமர்சிக்க, விமர்சிக்க நான் வளர்ந்துகொண்டே இருப்பேன். எனவே, என்னை விமர்சிப்பவர்க ளுக்கு நன்றி கூறிக்கொள்கின்றேன்.

அடுத்த 10 வருடங்களில் மலையகத்தில் சுற்றுலாதுறைசார் அபிவிருத்திகள் அதி கரிக்கவுள்ளன. அவ்வாறு நடைபெறும்போது நமது இளைஞர்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படவேண்டும். கடந்த இரண்டு வரு டங்களில் மூன்று ஹோட்டல்கள் அமைக்கப் பட்டுள்ளன. இங்கு 10 வீதமானோருக்கே வேலை வாய்ப்பு. அதுவும் முன்னேறமுடியாத வகையில் முடக்கியே வைக்கின்றனர். இந் நிலைமை மாறவேண்டும்.

மலையகப் பல்கலைக்கழகம் அமைக் கப்படும்போது ஹோட்டல் முகாமைத்துவம் தொடர்பான கற்கை நெறியையும் கோரி யுள்ளோம்.

அதேபோல் மலையகத்தில் விவசாய கல் லூரியொன்றை அமைக்குமாறும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத் துடன் இணைந்ததாக அது அமைக்கப்படும். ஏனெனில் இலங்கையில் எதிர்காலம் இனி வரும் காலப்பகுதியில் மலையகத்தை நம் பியே இருக்கப்போகின்றது. மரக்கறி தட்டுப் பாடு வரலாம். இங்குதான் அதிகம் உற்பத்தி செய்யப்படும். வாய்ப்பை நாம் பயன்படுத் திக்கொள்ளவேண்டும்.

இன்று நாம் ஓட்ட பந்தயத்தில் ஈடுபட்டுள் ளோம். ஒரு புறத்தில் கம்பனி காரர்கள். மறு புறத்தில் நாம். கம்பனிகாரர்களிடம் பணபலம் இருக்கின்றது. ஆள் பலம் இல்லை. எம்மிடம் ஆள்பலம் இருக்கிறது. பண பலம் இல்லை. நாளை அவர்கள் தேயிலை தோட்டங்களில் விவசாயம் செய்யலாம். அதற்கு முன்னர் நாம் முந்திக்கொள்ளவேண்டும். சுயதொழி லில் ஈடுபட்டு நாமும் முதலாளிகளாக வேண் டும். அதற்கான ஏற்பாடுகளை நாம் செய்து கொடுப்போம். - என்றார்.

# புதிய பல்கலைக்கழகங்கள் 5 மாவட்டங்களில் அமையும்

கொழும்பு, ஜூலை 08

ஐந்து மாவட்டங்களில் புதிய பல்கலைக் கழகங்களை நிர்மாணிப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

களுத்துறை, நுவரெலியா, மாத்தளை, அம்பாந்தோட்டை மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் புதிய பல்கலைக் கழகங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன என அதன் உப தலைவர் பேராசிரியர் ஜனிதா லியனகே தெரிவித்துள்ளார்.


இந்த விடயம் தொடர்பில் ஆராய்வதற் காக 5 பேராசிரியர்கள் கொண்ட குழு நிய மிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

'இஸட்' மதிப்பெண்ணின் அடிப்படை யில் மாணவர்கள் பல்கலைக்கழகங் களுக்குத் தெரிவு செய்யப்படமாட்டார்கள் எனவும், கல்விப் பொதுத்தர உயர்தரப் பரீட்சை முடிவுகளின் பிரகாரம் மாண வர்கள் பல்கலைக்கழகத்துக்கு உள்வாங் கப்படுவார்கள் எனவும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள் ளது.

பல்கலைக்கழகங்களை நிர்மாணிப்ப தற்கான காணிகளை மதீப்பீடு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என உப தலைவர் குறிப்பிட்டார்.

இந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் பல்கலைக்கழகக் கட்டுமானப் பணிகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு கூறியுள்ளது.

# நுவரெலியாவை வென்று காட்டுங்கள்! நவீன் திஸநாயக்காவுக்கு மனோ சவால்



முடியுமானால் நுவரெலியா மாவட்டத்தை வென்றுகாட்டுமாறு நவீன் திஸாநாயக்கவுக்கு சவால் விடுக்கின்றேன். - என்று தமிழ் முற் போக்கு கூட்டணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாள ருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின்போது, நவீன் திஸாநாயக்க விடுத்திருந்த அறிவிப்பொன்று தொடர்பில் ஊடகவியலா ளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக் கையிலேயே அவர் இந்த சவாலை விடுத் தார்.

பொதுத்தேர்தலில் வெற்றிபெறுவது ஒரு புறம் இருக்கட்டும். முடிந்தால் நுவரெலியா மாவட்டத்தை வென்றுகாட்டுமாறு நவீன் திஸாநாயக்கவிடம் சொல்லுங்கள். அதன் பிறகு 40 ஆசனங்கள் பற்றி கதைக்கலாம். என்றும் மனோ கூறினார்.

# கொந்தகை அகழாய்வில் குழந்தையின் எலும்புக்கூடு






தமிழகத்தின் கொந்தகை, மணலூர், அகரம், கீழடி ஆகிய இடங்களில் இப்போது ஆறாவது கட்ட அகழாய்வு நடந்து வருகிறது. கொந்தகையில், நேற்று (செவ்வாய்கிழமை) மற்றொரு குழந்தையின் எலும்பு கூடு கண்டறியப்பட்டுள்ளது.

ஜூன் மாதம் 19ஆம் திகதி குழந்தை ஒன்றின் முழு அளவிலான எலும்புக்கூடு முதன் முறையாக அங்கு கண்டெடுக்கப்பட்டது. அது 75 சென்ரி மீற்றர் நீளமுள்ளது.

மேலும் இந்த இடத்தில் அகழாய்வு பணிகள் நடந்த போது நேற்று (செவ்வாய் கிழமை) 95 சென்ரி மீற்றர் நீளத்தில் மற்றொரு குழந்தையின் எலும்புகூடு கிடைத்தது. இடுகாடாகப் பயன்படுத்தப்பட்ட கொந்தகையில் முதல், 2ஆம், 3ஆம் நிலை எலும்புதுண்டுகள் தொடர்ச்சியாக கிடைத்து வருகின்றன. குழந்தையின் எலும்பு கூடுகள் 3ஆம் நிலை என கருதப்படுவதாகத் தொல்லியல் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

இன்று கொந்தகை அகழாய்வின்போது குழந்தையின் எலும்புக்கூடு முழு அளவில் கிடைத்துள்ளது. பெருங்கற்காலத்தில் இறந்தவர்களை மூன்று வெவ்வேறு வழிமுறைகளில் புதைக்கும் வழக்கம் இருந்தது. பூமியில் போட்டு மூடுவது, பள்ளம் தோண்டிப் புதைப்பது, தாழியில் வைத்துப் புதைப்பது ஆகிய வழக்கங்கள் இருந்தன. இன்று கொந்தகையில் கிடைத்துள்ள குழந்தையின் உடல் முதல் வழிமுறையில் புதைக்கப்பட்டது. ஏனனில், இன்று கிடைத்துள்ள குழந்தையின் எலும்புக்கூடு இருந்த பகுதியில் மணல் மிகவும் தளர்வாக இருந்தது, ' என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.




## ராஜீவ் காந்தி அறக்கட்டளையை விசாரிக்கப் புதிய குழு அமைப்பு

ராஜீவ் காந்தி அறக்கட்டளை உட்பட 3 அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட நன்கொடைகள் குறித்து விசாரிப்பதற்கு இந்திய அரசு குழு ஒன்றை நிறுவியுள்ளது.

ராஜீவ் காந்தி குடும்பத்துடன் தொடர்புடைய மூன்று அறக்கட்டளைகள் நிதி நடவடிக்கையில் முறைகேடு செய்ததாக எழுந்துள்ள குற்றச்சாட்டைத் தொடர்ந்தே அதை விசாரிப்பதற்கு இவ்வாறு குழு அமைக்கப்பட்டுள்ளது.

ராஜீவ் காந்தி அறக்கட்டளை, ராஜீவ் காந்தி தொண்டு நிறுவனம், இந்திரா காந்தி நினைவு அறக்கட்டளை ஆகியவை வருமான வரி மற்றும் வெளிநாட்டு நன்கொடை விதிகளை மீறியது தொடர்பான விசாரணைகளை ஒருங்கிணைப்பதற்கு இந்திய உள்துறை அமைச்சகம் அமைச்சகக் குழு ஒன்றை அமைத்துள்ளது. நடைமுறைத்துறையின் சிறப்பு இயக்குநர் இந்த விசாரணைக் குழுவின் தலைவராக இருந்து விசாரணையைக் கண்காணிக்க உள்ளார் என்று உள்துறை அமைச்சகத்தின் செய்தித்தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

## பிரண்ட்ஸ் ஒவ் பொலிஸுக்கு தடை விதித்தது தமிழக அரசு

பிரண்ட்ஸ்ஒவ்பொலிஸ்அமைப்பினரைக் பொலிஸார் பயன்படுத்திக்கொள்வதற்கு வழங்கப்பட்டிருந்த அனுமதியை நீக்கித் தமிழக அரசு உத்தரவு பிறப்பித்தது.

சாத்தான் குளம் சம்பவத்தை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாகத் தமிழக அரசின் மேலதிகச் செயலர் வெளியிட்டுள்ள உத்தரவில், தமிழகப் பொலிஸ் துறைத் தலைவரிடமிருந்து பெறப்பட்ட அறிக்கையின்படி, பிரண்ட்ஸ் ஒவ் பொலிஸ் அமைப்பை பயன்படுத்திக்கொள்ள அளிக்கப்பட்டிருந்த அனுமதி நீக்கப்படுவது தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

சாத்தான் குளத்தில் தந்தை - மகன் பொலிஸ் காவலில் அடுத்தடுத்து இறந்த விவகாரத்தில் சாத்தான் குளம் பொலிஸ் நிலையத்தில் இருந்த பொலிஸார் தவிர, தன்னார்வலர்களாக இருந்த இளைஞர்கள் சிலரும் தாக்குதலில் ஈடுபட்டன என முறைப்பாடு எழுந்தது. இந்தத் தன் னார்வலர்கள் பிரண்ட்ஸ் ஒவ் பொலிஸ் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று பாதிக்கப்பட்ட தரப்பினர் கூறிய நிலையில், அந்த அமைப்பினர் அதை மறுத்தனர்.

இதற்குப் பிறகு, சில மாவட்டங்களில் வாய்மொழி உத்தரவாக அந்த அமைப்பைப் பயன்படுத்திக்கொள்வதற்கு அந்தந்த மாவட்டப்பொலிஸ் கண்காணிப்பாளர்கள் தடைவிதித்தனர். இந்த அமைப்பை முழுமையாகத் தடை செய்ய வேண்டுமென்று சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றும் தொடரப்பட்டது. இந்த வழக்கை




விசாரித்த நீதிமன்றம், இந்த அமைப்புக்கு வழங்கப்பட்டுள்ள சட்ட அங்கீகாரம் குறித்து கேள்வியெழுப்பியது.

இந்த நிலையில்தான் அந்த அமைப்பைப் பயன்படுத்த வழங்கப்பட்ட அனுமதியைத் தமிழக மாநில அரசு நிறுத்தியுள்ளது.

## பிரேசில் அதிபர் குணமடைய இந்தியப் பிரதமர் பிரார்த்தனை!



கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட பிரேசில் அதிபர் விரைவில் குணமடைய வேண்டும் என்று இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

முக்கள் கொரோனா அச்சத்தில் இருக்கும் போது சமூக விலகல், முகக்கவசம் தேவையில்லை சுதந்திரமாக நடமாடுங்கள் என்று கூறித் தானும் முகக் கவசம் அணியாமல் பொது வெளியில் சுற்றித் திரிந்த பிரேசில் அதிபர் ஜெயிர் போல்சனரோவுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. தற்போது அவர் தன்னை வீட்டில் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளார். இந்த நிலையில், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள பிரேசில் அதிபருக்காக இறைவனிடம் பிரார்த்திப்பதாகவும், விரைவில் குணமடைய வாழ்த்துவதாகவும் இந்தியப் பிரதமர் மோடி தனது கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

## சாத்தான்குளம் விவகாரத்தில் மேலும் 5 பொலிஸார் கைது



சாத்தான்குளத்தைச் சேர்ந்த தந்தை, மகன் பொலிஸாரால் தாக்கப்பட்டு உயிரிழந்தது தொடர்பான வழக்கில் மேலும் 5 பொலிஸாரை சி.பி.சி.ஐ.டி. பொலிஸார் கைது செய்தனர்.

இந்த விவகாரத்தில் சி.பி.ஐ. விசாரணையைத் தொடங்கும் வரை சி.பி.சி.ஐ..டி விசாரிக்கும் என்று உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளை தெரிவித்தது. அதன்படி விசாரணையைத் தொடங்கிய சி.பி.சி.ஐ.டி, தலைமைப் பொலிஸ் அதிகாரி ஒருவர், உப பொலிஸ் அதிகாரிகள் 2பேர், 2 பொலிஸ் அதிகாரிகள் என 5 பேரை அதிரடியாகக் கைது செய்து சிறையில் அடைத்தது.

தொடர்ந்து பல்வேறு கோணங்களில் சி.பி.சி.ஐ.டி. அதிகாரிகள்விசாரணைநடத்திவருகின்றனர். இந்த நிலையில், சாத்தான்குளத்தில் பணியில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் பால்துரை, பொலிஸா ரான செல்லத்துரை, சாமத்துரை, தோமஸ் உள்ளிட்ட 5 பேரிடம் விசாரணை நடத்தப் பட்டது.

தூத்துக்குடி சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்தில் நடைபெற்ற இந்த விசாரணைக்குப் பிறகு 5 பொலிஸாரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட 5 பேரும் மருத்துவப் பரிசோதனைக்குப் பிறகு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். இதற்கிடையே இந்த வழக்கை சி.பி.ஐ விசாரணை நடத்துவதற்கு நீதிமன்றம் அனுமதி அளித்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.




லடாக் எல்லைப் பகுதியிலிருந்து சீனப் படைகள் வெளியேறியுள்ளதைக் காட்டும் செயற்கைகோள் படங்கள் இவை. இந்திய ஊடகங்களில் இந்தப் படங்கள் வெளியாகின்ற கடந்த 6 ஆம் திகதி அங்கிருந்து சீனப் படைகள் விலகின என்று இந்தப்படங்களை மேற்கோள்காட்டிச் செய்தி வெளியிட்டன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# சிரியா அரசும் ரஷ்யாவும் போர்க் குற்றம்!

ஐ.நா. தெரிவிப்பு



சிரியாவின் இட்லிப் மாகாணத்தில் சிரியப் படைகளும் மற்றும் ரஷ்யாவும் போர்க் குற்றங்கள் புரிந்துள்ளன என்று ஐக்கிய நாடுகளின் விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரியாவின் இட்லிப் மாகாணத்தில் அரசபடைகள் - ஆயுததாரிகள் இடையே கடும் தாக்குதல் நடந்தது. இதில் நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்தனர்.

இந்த விவகாரம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை விசாரணையில் நடத்தியது. அததொடர்பான அறிக்கைதற்போது வெளியாகியுள்ளது. அந்த அறிக்கையில் ர;யாவும் சிரியப் படைகளும் போர்க் குற்றங்கள் இழைத்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: -

இட்லிப் மாகாணத்தில் உள்ளமருத்துவமனைகள், பாடசாலைகளில் சிரிய, ரஷ்யப் படைகள் வான் வழித் தாக்குதலை நடத்திப் போர்க் குற்றங்கள் புரிந்துள்ளன. சிரிய அரசுக்கு ஆதரவான படைகள் போர் விதிகளை மீறியுள்ளன. ஆயுததாரிகள் தரப்பும் போர்க் குற்றங்களில் ஈடுபட்டுள்ளது என்றுள்ளது. கடந்த நான்கு மாதங்களில் சிரியாவில் ரஷ்யா நடத்திய தாக்குதலில் பொதுமக்கள் 500 பேர் வரை உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

### சிரிய மோதல்

சிரியாவில் அந்த நாட்டு அதிபர் ஆசாத்துக்கும் ஆயுததாரிகளுக்கும் இடையே ஆறு ஆண்டுகளாக மோதல் நடந்துவருகிறது. அது இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது. அதிபர் ஆசாத்துக்கு ரஷ்யாஆதரவளிக்கிறது. ஆயுததாரிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சிரியாவின் பல்வேறு பகுதிகள் அரசு கூட்டுப் படைகளால் மீட்கப்பட்டுவிட்டன. ஆயுததாரிகளின் பிடியில் உள்ள சில இடங்களில் அவ்வப்போது மோதல் நடந்து வருகிறது.

## சுகாதார ஸ்தாபனத்திலிருந்து அமெரிக்கா விலகுவது உறுதி



உலக சுகாதார நிறுவனத்திலிருந்து விலகுவதற்கான நடைமுறைகளை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ஆரம்பித்துள்ளார். கொரோனா வைரஸ் தொற்று விவகாரத்தில் சீனாவைப் பொறுப்பாக்குவதில் உலக சுகாதார நிறுவனம் தோல்வியடைந்து விட்டதாகக் குற்றஞ்சாட்டிய ட்ரம்ப், அந்த அமைப்புடனான அமெரிக்காவின் உறவைத் துண்டிப்பதாகக் கடந்த மே மாதம் அறிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே உலக சுகாதார ஸ்தாபனத்திலிருந்து விலகுவதற்கான நடைமுறைகளை அமெரிக்கா ஆரம்பித்துள்ளது. உலகசுகாதாரநிறுவனத்திலிருந்துவிலகுவதற்கான அறிவிப்பை அமெரிக்கா அனுப்பியுள்ளது. 2021ஆம் ஆண்டு ஜுலை மாதம் 6ஆம் திகதிக்குப் பிறகு அமெரிக்கா இதிலிருந்து விலகும் என்றுஐக்கிய நாடுகள் சபைப் பொதுச்செயலரின் செய்தி தொடர்பாளர் தெரிவித்தார்.

கொரோனா பெருந்தொற்றுக்கு மத்தியில், உலக சுகாதார நிறுவனத்திலிருந்து அமெரிக்க அதிகாரபூர்வமாக விலகுவது குறித்த அறிவிப்பை வெள்ளை மாளிகை, நாடாளுமன்றத்துக்கு அனுப்பியுள்ளது என்று அமெரிக்க வெளியுறவுக் குழுவின் உறுப்பினரும், ஜனநாயக கட்சியின் முன்னணிசெனட்டருமானராபர்ட்மெனண்டெஸ் தனது கீச்சகப் பக்கத்தில் இது குறித்துப் பதிவிட்டுள்ளார். இந்த முடிவு, அமெரிக்கர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்; அமெரிக்காவைத் தனிமைப்படுத்தும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின்இந்தமுடிவைமறுபரிசீலனை செய்யுமாறு ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பல நாடுகள் கேட்டுக்கொண்டபோதும், உலக சுகாதார நிறுவனத்துக்குஅமெரிக்காசார்பில்அளிக்கப்பட்டு வரும் நிதி நிறுத்தப்பட்டு மற்ற அமைப்புகளுக்கு வழங்கப்படும் என்று ட்ரம்ப் தெரிவித்திருந்தார். அமெரிக்காவின் இந்த முடிவை ஐ.நாவுக்கும், அமெரிக்க நாடாளுமன்றத்துக்கும் தற்போது ட்ரம்ப் தெரியப்படுத்தியுள்ளார். உலக சுகாதார நிறுவனத்துக்கு அதிக நிதி அளிக்கும் நாடாக அமெரிக்கா இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

## கொரோனா காற்றிலும் பரவும்!

### உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

காற்றில்உள்ளமிகச்சிறிய பொருள்கள்மூலம்கொரோனா வைரஸ்தொற்றுப்பரவக்கூடும் என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்தது. இது தொடர்பாகச்சில ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

மக்கள்கூட்டம்அதிகமுள்ள, முற்றிலும் மூடப்பட்ட மற்றும் மோசமான காற்றோட்ட வசதி உள்ள இடங்களில் காற்று வழியாக இந்த வைரஸ் பரவலாம் என்பதை மறுக்க இயலாது என்று உலக சுகாதார நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்கூறியஆதாரம்உறுதி செய்யப்பட்டால் உள்ளரங்குகளில் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளில் மாற்றம் செய்யவேண்டிவரும் என்றும் உலக சுகாதார அமைப்பு மேலும் தெரிவித்தது. ஒருவர் இருமும் போதும், தும்மும் போதும் வெளியேறும் நீர்க் குமிழிகள்மூலம்இந்தவைரஸ் பரவுவதாக இதுவரை உலக சுகாதார நிறுவனம் தெரிவித்திருந்தது.

காற்று வழியாகக் கொரோனாத் தொற்றுப் பரவுவதற்கு வாய்ப்பிருக்கிறது என்றும் இதை உலகசுகாதார நிறுவனம் குறைத்து எடைபோட்டு விட்டது என்றும் 200க்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள் ஒன்றிணைந்து கையெழுத்திட்டு உலக சுகாதார ஸ்தாபனத்துக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தனர்.



அந்தக் கடிதத்தில் இந்தப் புதிய ஆதாரத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். இது உலக சுகாதார நிறுவனத்தைத் தாக்கி நாங்கள் அனுப்பிய கடிதம் அல்ல.

இது ஓர் அறிவியல் விவாதம்; ஆனால் நாங்கள் பல முறை இது குறித்து விளக்கியும் அவர்கள் இது குறித்துக் கேட்க மறுப்பதால், இதைப் பொது மக்களுக்கு எடுத்துரைக்க உள்ளோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்தப் புதிய ஆதாரங்கள் ஆரம்ப நிலையில் உள்ளதாகவும், இது குறித்து மேலும் விரிவான மதிப்பீடு தேவை என்றும் உலக சுகாதார நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

## முகக் கவசம் அணியாமல் உலாவிய பிரேசில் அதிபருக்குக் கொரோனா!

பிரேசில் நாட்டின் அதிபர் சயீர் பொல்சனாரூவுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகள் தென்பட்டதால் அவருக்குக் கொரோனாப் பரிசோதனை செய்யப்பட்டது. இதில் அவருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.



இதற்கு முன்பு கொரோனாத்தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் மூன்று முறை பொல்சனாரூவுக்குக் கொரோனாப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் கிட்டத்தட்ட ஒரு சாதாரண காய்ச்சல் போன்றதுதான் என்று கூறிவந்த பொல்சனாரூ, தனக்குக் கொரோனா வைரசால் எந்தப் பாதிப்பும் இல்லை என்றும் கூறி வந்தார். பிரேசிலில் கொரோனாத் தொற்று அதிகரித்துச் சென்றுகொண்டிருந்தபோது, சமூக விலகல் அறிவுரைகளை மீறித் தனது ஆதரவாளர்களுடன் தலைநகர் பிரேசிலியாவில் அவர் ஒளிப்படம் எடுத்துக்கொண்டது சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. அதுமட்டுமின்றி, ஆரம்பத்திலிருந்தே முடக்க நிலைக்கு எதிரான நிலைப்பாட்டைக் கடைப்பிடித்து வந்த பொல்சனாரூ, சமூக முடக்கம் நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழித்துவிடும் என்று வாதிட்டார்.

மேலும் முகக் கவசம் அணிவதையும் தவித்து வந்தார். பொது இடங்களில் முகக் கவசம் அணியாமல் திரிந்த அவருக்கு அபராதம் விதிக்கப்படும் என்று அந்நாட்டு நீதிமன்றம் எச்சரித்திருந்தது. இந்த நிலையிலேயே அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

*பிரபல ஓவியர் லியோனாடோ டாவின்சி வரைந்த 'மோனாலிசா' ஓவியம் பிரான்சின் பாரிஸில் உள்ள லூவ்ரே அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் காரணமாக நான்கு மாதங்கள் மூடப்பட்டிருந்த அந்த அருங்காட்சியகம் பொதுமக்களின் பார்வைக்குத் திறந்து விடப்பட்டது. மோனலிசாவைப் பார்வையாளர்கள் ஒளிப்படங்கள் எடுத்துக்கொள்கிறார்கள்.*



# வெடித்தது பெற்றோல் லொறி கொலம்பியாவில் 7 பேர் சாவு

வேடிக்கை பார்த்தவர்களுக்கு நேர்ந்த கதி



தென் அமெரிக்க நாடான கொலம்பியாவின் வடமேற்குப் பகுதியில் உள்ள அட்லாண்டிக்கோ மாகாணத்தில் பாரன்குவிலா மற்றும் சினாகா நகரங்களை இணைக்கும் வீதியில் நேற்றுமுன்தினம் பெற்றோல் தாங்கி லொறி ஒன்று வெடித்தது. இந்த விபத்தில் 7பேர் பரிதாபமாகச் சாவடைந்தனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது: குறித்த லொறி அதிவேகத்தில் சென்றுகொண்டிருந்தபோது ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் கவிழ்ந்தது. லொறியில் இருந்த பெற்றோல் முழுதும் வீதியில் சிந்தியது.

இதையடுத்து அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் விபத்து நடந்த பகுதியில் குவிந்தனர். வீதியால் சென்றுகொண்டிருந்த வாகன ஓட்டிகளும் வாகனங்களை ஆங்காங்கே நிறுத்திவிட்டு விபத்து நடந்த பகுதியில் குவிந்தனர். அப்போது அந்த லொறியில் தீப் பற்றி வெடித்து சிதறியது. இதில் அங்கு விபத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்களில் பலர் தீயில் சிக்கிச் சாவடைந்தனர். 50க்கும் மேற்பட்டோர் பலத்த தீக்காயங்களுக்கு உள்ளாகினர். இவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் சாவு எண்ணிக்கை மேலும் உயரலாம் என அஞ்சப்படுகிறது.

பிணைமுறை மோசடி தொடர்பில்

# நான் சில விடயங்களை வெளியிட்டால் அரசிலிருக்கும் சிலர் சினமடைவர்கள்!

## இப்படிக் கூறுகின்றார் ரணில்



கொழும்பு, ஜூலை 08

கடந்த 2015 ஆம் ஆண்டு நடந்த சர்ச்சைக்குரிய, இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி கொடுக்கல், வாங்கல்கள் சம்பந்தமாக நான் அறிந்த சில விடயங்களை வெளியிட்டால், அரசில் இருக்கும் சிலர் கோபித்துக்கொள்வார்கள்.

– இவ்வாறு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் சம்பந்தமாக வாக்குமூலம் ஒன்றைப் பெறுவதற்காக குற்றவியல் விசாரணைத் திணைக்கள அதிகாரிகள் கடந்த 3 ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்கவை அவரது வீட்டில் சந்தித்தனர்.

இது குறித்து சிங்கள இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் கருத்து வெளியிட்டுள்ள ரணில் விக்கிரமசிங்க,

இந்த அதிகாரிகள் எழுப்பிய சில கேள்விகள் குறித்து பேசினால், அரசில் இருக்கும் நபர்கள் என்னுடன் கோபித்துக்கொள்வார்கள்.

எவ்வாறாயினும் பிணைமுறி கொடுக்கல், வாங்கல் சம்பந்தமாக எனக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் எதுவுமில்லை. தேவையெனில் சட்டமா அதிபர் எனக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியும்.

அந்தப் பிணைமுறி கொடுக்கல், வாங்கல்களில் மோசடி நடக்கவில்லை. ஆனால், தவறு நடந்திருக்க வாய்ப்புள்ளது.

முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநருக்கும் பேர்ப்பச்சுவல் நிறுவனத்தின் பணிப்பாளருக்கும் இடையிலான உறவு முறையே இதில் பிரதான பிரச்சினையாக இருந்தது – என்றார்.

## கிழக்கு மரபுரிமைகளை பாதுகாக்கும் ஜனாதிபதி செயலணி வர்த்தமானியில்

கிழக்கு மாகாணத்தின் தொல்பொருள் மரபுரிமைகளை முகாமைத்துவம் செய்வதற்கான ஜனாதிபதிசெயலணியின் உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய, ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.ஜயசுந்தரவினால் நேற்று இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த செயலணியின் உறுப்பினர்களாக எல்லாவல மேதானந்த நாயக்க தேரர், பனாமுரே திலகவங்ச நாயக்க தேரர், பாதுகாப்புச் செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன, தொல்பொருள் பணிப்பாளர்நாயகம் கலாநிதி செனரத் பண்டார திசாநாயக்க, காணி பணிப்பாளர் நாயகம் சந்திரா ஹேரத் உள்ளிட்ட பெரும்பான்மை இனத்தவர்கள் 11 பேர் பெயரிடப்பட்டுள்ளனர்.

## பிரசாரத்துக்காக கோட்டா திருமலைக்கும் செல்வார்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக திருகோணமலைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

எதிர்வரும் 20ஆம் திகதி ஜனாதிபதி அங்கு விஜயம் செய்யவுள்ளார் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் திருகோணமலை மாவட்ட வேட்பாளர் எம்.எஸ்.உவைஸ் தெரிவித்துள்ளார்.

இந்த விஜயத்தின்போது கிண்ணியா, திருகோணமலை, கந்தளாய் ஆகிய பிரதேசங்களில் நடைபெறவுள்ள மக்கள் சந்திப்பில், ஜனாதிபதி கலந்துகொள்ளவுள்ளார்.

இதன்போது, கல்வி, சுகாதாரம், காணி, மீள்குடியேற்றம், அபிவிருத்தி, உட்கட்டமைப்பு, மக்களின் வாழ்வாதாரம் சம்மந்தமான பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் கிடைக்குமென உவைஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

## சமூகத்திற்குத் தொண்டாற்ற கூடியவர்களிற்கு வாக்களிக்கும்படி கோருகின்றது சிவசேனை

நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் இளைஞர்களிற்கும் சமூகத்திற்குத் தொண்டாற்ற கூடியவர்களிற்கும் வாக்களிக்குமாறு சிவசேனை அமைப்பின் வன்னிமாவட்ட இணைப்பாளர் அ.மாதவன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் பொதுமக்கள் தமது வாக்குகளை புதிய வேட்பாளர்களாக இருப்பவர்களிற்கும் இளைஞர்களுக்கும் அளிக்குமாறு கேட்டுகொள்கிறோம். இந்த வருடத்தில் ஒரு மாற்றம் ஏற்படும் என்ற நோக்கோடு வாக்களித்தால் அது சிறப்பாக இருக்கும்.

அத்துடன் ஒவ்வொருவரும் தங்களது வாக்குகளை கட்டாயம் அளிக்கவேண்டிய தேவைப்பாடுள்ளது. அது எமது உரிமையாக இருக்கிறது. அந்த வாக்கை நாம் நிச்சயம் பயன்படுத்தவேண்டும்.

நாம் எந்தக் கட்சிகளையும் சுட்டிகாட்டி முரண்பாடு எதனையும் முன்னெடுக்கவில்லை. ஒரு கட்சியின் பெயரையும் குறிப்பிடவில்லை.

ஆனால் வாக்களிக்கும் போது, சமூகத்திற்குத் தொண்டாற்ற கூடியவர்கள், இந்த நாட்டிலே இருக்க கூடிய பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடியவர்களிற்கு வாக்கினை அளிக்க வேண்டும்.

குறிப்பாக காணாமல் போனவர்கள் நீண்டகாலமாக போராடுகின்றார்கள். எனவே இவ்வாறான தீர்க்கப்படமுடியாத பிரச்சினைகளிற்கான தீர்வை எல்லாம் பெற்று கொடுக்கும் நோக்கோடு இருக்கக்கூடியவர்களிற்கும், சமூகத்தின் பொருளாதாரத்தை கட்டிவ் எழுப்ப கூடியவர்களிற்குமே வாக்களிக்கவேண்டும். அது யார் என்று மக்களே தீர்மானிக்கவேண்டும்.

குறிப்பாக இளைஞர்கள் துடிதுடிப்பானவர்கள். எந்த விடயத்தையும் துணிவுடன் செய்யகூடியவர்கள், தங்களுடைய பேச்சுதிறமைகளின் மூலம் நாடாளுமன்றில் பேசி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய நிலையில் அவர்கள் இருப்பார்கள்.

அத்துடன் மன்னார் மாவட்டத்தில் சைவ மக்கள் கட்சி சுயேச்சையாக இம்முறை தேர்தலில் களம் இறங்கியிருக்கிறது. மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரை அந்த சைவமக்கள் கட்சி நிச்சயமான தேவையாக இருக்கிறது. எதிர்காலங்களில் ஏனைய மாவட்டங்களிலும் அந்த விடயங்கள் தொடர்பாக சிந்திக்கப்படும் – எனக் குறிப்பிட்டுள்ளார்.

## வெலிகடைத் தொற்றால் தேர்தலுக்குப் பாதிப்பா?

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் , ஜூலை 08

கொழும்பு வெலிக்கடை சிறையில் இருந்த கைதி ஒருவருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்ட நிலையில் அதற்குப் பக்கத்தில் இருக்கும் அரச அச்சகமும் இழுத்து மூடப் படக்கூடிய சூழ்நிலைதோன்றியுள்ளது. இதனால் தேர்தல் பணிகள் தாமதிக்கும் அபாயம் எதிர்கொள்ளப்படுகின்றது.

கொழும்புவெலிக்கடைச்சிறையில் இருந்தகைதிஒருவருக்கு கொரோனா தொற்று என உறுதி செய்யப்பட்டதனால் அதன் மிக அருகே இருக்கும் அரச அச்சகமும் இழுத்துமூடப்பட்டது. இதனால் தேர்தலிற்கான படிவங்கள், அரச இதழ்கள் என்பன அச்சிடுவதில் தாமதம் ஏற்படக் கூடும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இவ்விடயத்தில் தேர்தல் ஆணைக்குழு விசேட கவனம் செலுத்துகின்றது. அப் பிரதேசம் இயல்பிற்கு திரும்பாதுவிடின் அச்சகத்தை இடமாற்றம் செய்வதா அல்லது வேறு அச்சகம் மூலம் விடயங்களை ஒப்பேற்றுவதா என்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படுகின்றது.

இருந்தபோதும் இதுவரை இந்த விடயம் தொடர்பில் ஆணைக்குழு இறுதிமுடிவு எதனையும் எட்டவில்லை என்றே தெரிவிக்கப்படுகின்றது.

## இதுவரை 2,084 தேர்தல் முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூலை 08

2020 நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில், இதுவரை 2,084 தேர்தல் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அவற்றில் 1,496 முறைப்பாடுகள் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையத்திற்கும் 588 முறைப்பாடுகள் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையத்திற்கும் கிடைத்துள்ளன என அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அந்த ஆணைக்குழு, நேற்று பிற்பகல் 04 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் 121 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனக் குறிப்பிட்டுள்ளது

மேலும் இதுவரை ஒரேயொரு வன்முறைச் சம்பவமே பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## கேள்விக்கு உள்ளாக்கப்படுகின்றது இனத்தின் இருப்பு என்கிறார் சிறீதரன்

கிளிநொச்சி, ஜூலை 08

எம் இனத்தின் இருப்பு கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது எனதமிழ்தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி செல்வாநகர் பகுதியில் நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தின் போதே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

எம் இனத்தின் வாழ்க்கை என்பது அழிக்கப்பட்டுக்கொண்டு செல்கிறது. எங்களை நோக்கி புத்த கோவில்கள் வருகிறன.



எங்கள் இடங்கள் இராணுவ முகாம்களாக மாற்றப்படுகின்றன. காலையில் இருந்து மாலை வரை எத்தனையோ காவலரண்களைப் பார்கின்றோம்.

நாளாந்தம் புதிய புதிய காவலரண்கள் வருகிறன. இந்தச் சூழ்நிலைகள் எல்லாம் எங்களைப் பொறுத்த வரை ஒரு ஆபத்தான சூழ்நிலைக்குள்போய்கொண்டிருக்கின்றோம் என்பதையே உணர்த்துகின்றன.

முழுமையாக ஒரு இராணுவமயப்படுத்தப்பட்ட இராணுவ பிரசன்னத்திற்குள் வாழ்கின்ற சூழலில்எங்களைநோக்கி நகர்ந்து கொண் செல்கின்றது. இந்த சூழலில் தான் எங்கள் பணிகளை நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.



## இரட்டைக் குட்டிகளை ஈன்ற யானை இலங்கையில் இதுவே முதல் முறை

கொழும்பு, ஜூலை 08
மின்னேரியா தேசிய பூங்காவில் யானை ஒன்று இரட்டைக் குட்டிகளை ஈன்றுள்ளது.
யானைகள் பெரும்பாலும் ஒரு குட்டியையே ஈனும். அரிதாகவே அவை இரட்டைக் குட்டிகளை ஈனும்.
இலங்கை வரலாற்றில் பதிவான தகவல்களின் பிரகாரம் யானை ஒன்று இரட்டைக் குட்டிகளை ஈன்றுள்ளமை இது முதலாவது சந்தர்ப்பமாகும் என வன விலங்கு பாதுகாப்புத் துறை பணிப்பாளர் நாயகம் டாக்டர் தரக பிரசாத் தெரிவித்துள்ளார்.
அவதானிப்பின் படி இந்த இரட்டை யானைக் குட்டிகளின் வயது மூன்று முதல் நான்கு வாரங்கள் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
பெண் யானை 15 வயதில் கர்ப்பம் தரித்து 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு குட்டி ஈனும். அதன் கர்ப்பகாலம் 20 மாதங்களாகும். குட்டி பிறந்தவுடன் உடனடியாக ஆணா? அல்லது பெண்ணா? என கண்டுபிடிக்க முடியாது. அது 6 மாதம் ஆகும்போது பாலினத்தை இனம் காண முடியும் என விலங்குகள் துறைசார் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.
பெண் யானை ஒன்று அதன் ஆயுட்காலத்தில் 13 முறை குட்டிகளை ஈனக் கூடியது என்பது குறிப்பிடத்தக்கது.

## நல்லொழுக்க செயலணியில் சிறைச்சாலை ஆணையாளர்!

கொழும்பு, ஜூலை 08
பாதுகாப்பான நாடு, ஒழுக்கமான, நல்லொழுக்கமுள்ள மற்றும் சட்டபூர்வமான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப நியமிக்கப்பட்ட ஜனாதிபதி பணிக்குழுவின் உறுப்பினராக சிறைச்சாலைகளின் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய நியமிக்கப்பட்டுள்ளார்.
ஜனாதிபதி செயலாளர் கலாநிதி பி.பி.ஜயசுந்தரவின் கையொப்பத்துடன் வெளியான வர்த்தமானி அறிவித்தலில் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

## காட்டில் மின் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

மாவனல்லை ஹெம்மாதகம பிரதேசத்தில் மின்சாரம் தாக்கியதில் அறுபது வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இந்த நபர் இன்றைய தினம் விலங்குகளை வேட்டையாடுவதற்காகக் காட்டுக்குச் சென்றுள்ளார். இதன் போது விலங்குகளிடமிருந்து பாதுகாப்பு பெறும் நோக்கில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பற்ற மின் கம்பியில் உள்ள மின்சாரம் தாக்கி இவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
இந்த மின்கம்பிகளை காட்டில் பொருத்திய நபர் தொடர்பில் இதுவரையில் தகவல்கள் வெளியாகவில்லை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இந்தச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

### போதைப்பொருள் விவகாரம்:

# கைதாகியுள்ள அதிகாரிகளின் சொத்து தொடர்பில் விசாரணை

கொழும்பு, ஜூலை 08
போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தில் இருந்த போதைப்பொருளை கடத்தல்காரர்களுக்கு மீள விற்பனை செய்தமையை கான்ஸ்டபிள் ஒருவர் வழிநடத்தியுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.
சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிள், கரன்தெனிய பகுதியை சேர்ந்தவர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
அந்தச் சந்தேக நபருக்கு அதிக பெறுமதியான 4 காணிகள் சொந்தமாகவுள்ளன என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.
இதேவேளை, போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தின் இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட அதிகாரிகள் உள்ளிட்ட சந்தேகநபர்களின் சொத்து விவரங்கள் தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
இதன் பிரகாரம் 21 அதிகாரிகளின் சொத்து விவரங்கள் தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் சுட்டிகாட்டியுள்ளனர்.
சந்தேகநபர்களின் வங்கி கணக்குகள் அனைத்தும் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.
அந்த வங்கிக் கணக்குகள் தொடர்பில் விரிவான அறிக்கை வழங்குவதற்கு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இதேவேளை, பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்துடன் இணைந்து செயற்பட்ட சந்தேக நபர்களின் 7 வாகனங்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் கைப்பற்றியுள்ளனர்.
சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமையுடன் போதைப்பொருளுடன் தொடர்புடைய பொலிஸ் கான்ஸ்டபிள் நேற்றுக் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

## தெனவக்க ஆற்றில் இரு சடலங்கள் மீட்பு

கொழும்பு, ஜூலை 08
பெல்மடுல்ல – கமேகம, தெனவக்க ஆற்றில் இரண்டு ஆண்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
சடலங்களாக மீட்கப்பட்டவர்கள் இரு நாள்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கக்கூடும் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.
சடலங்களாக மீட்கப்பட்டவர்கள் தொடர்பிலான விவரங்கள் இதுவரை கண்டறியப்படவில்லை.

## கருணா பக்கம் பாய்ந்தார் கூட்டமைப்பின் பிரமுகர்

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கூட்டமைப்பின் உறுப்பினரான குணசேகரம் சங்கர் நேற்றுக் கருணாவுடன் இணைந்துள்ளார்.
இவர் த.தே.கூட்டமைப்பில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டவராவார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்தவை வருமாறு:–
இன்றைய சமகால அம்பாறை மாவட்ட சூழலில் அம்பாறைத் தமிழ் மக்களை மீட்கக்கூடிய ஒரே வல்லமை கருணாவுக்கு மட்டுமே உள்ளது.
மேலும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்கக்கூடிய திராணியும் சக்தியும் அவரிடமே உள்ளன.
அதனால்தான் இன்னும் மின்னும் ஏமாற்று அரசியலில் நிற்காமல் யதார்த்த அரசியலில் இணைந்து மக்களுக்காக சேவையாற்ற கருணாவுடன் இணைந்துள்ளேன்.
அம்பாறை மாவட்டத்தில் பிறந்த நான் இங்குள்ள மக்களின் பூர்வீகத்தை நன்கு அறிவேன்.
நானும் ஒரு போராளியாக இருந்தவன். அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் படும் இன்னல்களை துன்பங்களை அறிவேன். பாரிய பாரபட்சங்களையும் புறக்கணிப்புகளையும் சந்தித்தவர்கள்.
காணி அபகரிப்புகள், நிலப்பறிப்புகளை இன்றும் சந்திக்கிறார்கள். நான் எம்.பியாக இருந்த காலத்தில் என்ன செய்தேன் என்பதை மக்கள் அறிவார்கள். – என்றார்.

## இலங்கையில் சிக்கியிருந்த 153 பேர் இந்தியா பயணம்

கொழும்பு, ஜூலை 08
கொரோனாவைரஸ்பரவல் காரணமாக நாடு திரும்ப முடியாது இலங்கையில் சிக்கித் தவித்த இந்தியர்கள் 153 பேர் இந்தியாவுக்குச் சென்றுள்ளனர்.
இந்தியன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் சிறப்பு விமானத்தின் மூலமாக அவர்கள் இன்று புதன்கிழமை காலை 9.50 மணியளவில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க விமான நிலையத்திலிருந்து புதுடில்லி நோக்கிப் புறப்பட்டுள்ளனர்.
இலங்கையில் கட்டுமானம் மற்றும் ஏனைய தொழில்களில் ஈடுபடும் குழுவினரே இவ்வாறு புதுடில்லி நோக்கிப் பயணித்துள்ளனர்.

## பாடசாலை வாகனங்கள் இனி மஞ்சள் வர்ணத்தில்

கொழும்பு, ஜூலை 08
பாடசாலை வாகனங்களுக்கு எதிர்காலத்தில் குறிப்பிட்ட வர்ண குறியீட்டைக் கட்டாயமாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகப் போக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.
பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகன உரிமையாளர் சங்கத்துடனான கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
பாடசாலைவாகனங்களுக்குவர்ணக் குறியீடு எதிர்காலத்தில் கட்டாயமாக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.
பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்கள் அனைத்தும் மஞ்சள் வர்ணம் பூசப்படவேண்டுமெனத் தான் முன்மொழிந்துள்ளார் என அவர் கூறினார்.
எனினும் இதற்கு ஆகும் செலவீனம் பற்றி, வாகன உரிமையாளர்கள் சுட்டிக் காட்டினர். இதையடுத்து, தற்காலிகமாக வாகனங்களில் மஞ்சள் வர்ணக் கோடு இடுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
அத்துடன், புதிய நாடாளுமன்றத்தில் இந்த விடயம் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தமானியிடப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

## போதைப்பொருள் ஒழிப்புப் பணியக களஞ்சியம் தொடர்பில் விசாரணை

கொழும்பு, ஜூலை 08
பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தின் களஞ்சியத்தில் காணப்படும் போதைப்பொருள்களின் தொகை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
இந்த விசாரணை நடவடிக்கைகளுக்காக அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தின் உதவி பெற்றுக் கொள்ளப்படவுள்ளது.
பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தில் உள்ள அதிகாரிகள் சிலர் பொலிஸாரினால் கைப்பற்றப்படுகின்ற போதைப்பொருள்களை மீளவும் போதைப் பொருள் வியாபாரிகளிடம் வழங்குகின்றனர் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையினால், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார்.
இதேவேளை, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்ட பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தின் 12 பேரும் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.
இவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
கடவத்தை பொலிஸினால் கைது செய்யப்பட்ட போதைப் பொருள் ஒழிப்புப் பணியகத்தின் ஏனையவர்களும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப் பட்டு தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்கப்படுகின்றனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வடக்கு, கிழக்கில் தமிழர்களுக்கு விசேட உரிமைகள் ஏதும் இல்லை



## ராஜபக்ஷ அரசு திட்டவட்டம்

கொழும்பு,ஜூலை 08

இந்த நாட்டில் வடக்கு, கிழக்கு தமிழர்களுக்கு விசேட உரிமைகள் எதுவும் கிடையாது. இலங்கையானது பிளவுபடாத – பிரிக்கமுடியாது நாடு என்ற கருத்தாடலையும் அவர்கள் மத்தியில் உருவாக்கவேண்டும். – என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மையாக வாழும் தமிழ் மக்களின் ஆதரவை ராஜபக்ஷ அரசாங்கத்தால் ஏன் இன்னும் வெல்லமுடியாதுள்ளது என எழுப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:–

வடக்கு, கிழக்கில் தமக்கு சுயநிர்ணய உரிமை இருப்பதாக தமிழ் மக்கள் நம்புகின்றனர். இதனை அடிப்படையாகக்கொண்டு போராட்டம் இடம்பெற்றது. இதன் போது பிரதான கட்சிகள் மக்களை ஏமாற்றினவே தவிர, நேரடிப் பதில்கள் எதனையும் வழங்கவில்லை.

சிங்களம், தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு இந்நாட்டில் சம உரிமைகள் இருக்கின்றன என்பதை நாம் சுட்டிக்காட்டியுள்ளோம். எனவே, வடக்கு, கிழக்கு மக்களுக்கு அப்பகுதியில் விசேட உரிமையுள்ளது என்ற காரணியை ஏற்கமுடியாது. இதனை சுட்டிக்காட்டுவதால் எமது கட்சி மீது மக்கள் அதிருப்தியடைகின்றனர். இருப்பதை நாம் தடுப்பதுபோல் உணர்கின்றனர்.

தமிழ் மக்களுக்கு பிரபாகரன் கொடுமைகளை இழைத்திருந்தாலும் சிலர் மத்தியில் அவருக்கு ஆதரவு இருக்கின்றது என்பதையும் நாம் ஏற்கவேண்டும். போர் முடிவடைந்த பின்னர் அது இல்லாமல்போய் விட்டது. இதனால் கவலையில் இருக்கும் சிலரும் இருக்கவே செய்கின்றனர்.

எமது அரசாங்கத்தால் 2010 – 2015 காலப்பகுதியில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சமூக அபிவிருத்தி, பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு பாரிய திட்டங்களை முன்னெடுத்திருந்தாலும் சில அரசியல்வாதிகள் மக்கள் மத்தியில் தவறான கண்ணோட்டத்தையே ஏற்படுத்தினர். அரசாங்கத்துக்கு எதிரான கருத்தை கட்டியெழுப்பினர். 2019வரையிலும் இந்நிலைமை நீடித்தது.

சிங்களம், தமிழ், முஸ்லிம் என அனைத்து மக்களையும் சமமாக வழிநடத்தும் தலைவரே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ என்பதை வடக்கு, கிழக்கு மக்கள் புரிந்துகொள்வதற்கு இன்னும் சில காலம் எடுக்கும். அதற்கான அவகாசத்தை நாம் வழங்கவேண்டும். அதேபோல் இலங்கையானது பிளவுபடாத – பிரிக்க முடியாத நாடு என்பதையும் சுட்டிக்காட்டவேண்டும். – என்றார்.

# ரூபெல்லா - அம்மை நோயை ஒழித்த முதல் இரண்டு நாடுகளில் இலங்கை!

உலக சுகாதார அமைப்பின் வடகிழக்கு ஆசிய பிராந்திய நாடுகளில் ரூபெல்லா மற்றும் அம்மை நோயை ஒழித்த முதல் இரண்டு நாடுகளாக இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகள் பெயரிடப்பட்டுள்ளன.

இதற்கான இலக்காக 2023 ஆண்டு குறிப்பிடப்பட்டுள்ளது.

மூன்று வருடங்களினுள் ரூபெல்லா அல்லது அம்மை நோயாளர் ஒருவரேனும் இனங்காணப்படாவிட்டால் குறித்த நாடு குறித்த நோய்கள் இரண்டையும் ஒழித்த நாடாக உலக சுகாதார அமைப்பால் பிரகடனப்படுத்தப்படும்.

மாலைதீவில் இறுதியாக கடந்த 2009ஆம் ஆண்டு அம்மை நோயாளர் ஒருவர் பதிவாகியிருந்த நிலையில் கடந்த 2015ஆம் ஆண்டு ரூபெல்லா நோயாளர் ஒருவர் பதிவாகியிருந்தார்.

இதேவேளை, இலங்கையினுள் கடந்த 2016 ஆம் ஆண்டு இறுதியான அம்மை நோயாளர் பதிவான நிலையில் கடந்த 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ரூபெல்லா நோயாளர் ஒருவர் இனங்காணப்பட்டார் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

# புதிய பல்கலைக்கழகங்கள் 5 மாவட்டங்களில் அமையும்

கொழும்பு, ஜூலை 08

ஐந்து மாவட்டங்களில் புதிய பல்கலைக்கழகங்களை நிர்மாணிப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

களுத்துறை, நுவரெலியா, மாத்தளை, அம்பாந்தோட்டை மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் புதிய பல்கலைக்கழகங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன என அதன் உப தலைவர் பேராசிரியர் ஜனிதா லியனகே தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக 5 பேராசிரியர்கள் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.


‘இஸட்’ மதிப்பெண்ணின் அடிப்படையில் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படமாட்டார்கள் எனவும், கல்விப் பொதுத் தர உயர்தரப் பரீட்சை முடிவுகளின் பிரகாரம் மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு உள்வாங்கப்படுவார்கள் எனவும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழகங்களை நிர்மாணிப்பதற்கான காணிகளை மதீப்பிடு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என உப தலைவர் குறிப்பிட்டார்.

இந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் பல்கலைக்கழகக் கட்டுமானப் பணிகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கூறியுள்ளது.

# பக்க வெற்றிகள் பலவும் தேர்தலில் கிடைக்கும்

## அநுரகுமார நம்பிக்கை



இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் தனது கட்சி வெற்றி பெறாது என்பது தனக்குத் தெரியும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஆனால், தனது கட்சிக்குப் பக்க வெற்றிகள் பல கிடைக்கும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

நாடாளுமன்றத்தில் மக்களின் குரல் பாதுகாக்கப்பட வேண்டுமென்றால் திறமை மிக்க ஒரு குழுவை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

# புண்ணிம் செய்த குழுவே ஐக்கிய மக்கள் சக்தியில்!

## சஜித் கூறுகின்றார்

இம்முறை பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் புண்ணிம் செய்த குழுவினர் தனது கட்சியில் இருக்கின்றனர்.

–இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாட்டின் தேசிய பணத்தைத் திருடி அந்தப் பணத்தில் தேர்தலை நடத்துபவர்கள் எவரும் எங்கள் குழுவில் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

மொட்டுக் கட்சியினரும், வங்கிக் கொள்ளையர்களும் கள்ளத்தனமாகத் திருமணம் செய்து கொண்டுள்ளனர். அவர்கள் மக்களின் நலனைப் பார்க்காமல் சுயநலப் போக்குடன் செயற்படுகின்றனர்.

மக்கள் வியர்வையின் வாசனையை உணர்ந்துதான் அவர்களின் பிரதிநிதிகள் செயற்பட வேண்டும். அதற்கேற்ற மாதிரி நாம் செயற்படுகின்றோம். அது மகிழ்ச்சியையும் திருப்தியையும் எனக்கு ஏற்படுத்தும் – என்றார்.

# தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றவர்களும் வாக்களிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமாம்

கொழும்பு, ஜூலை 08

தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள மற்றும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு வாக்களிப்பதற்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான வழிமுறைகள் பற்றிய கலந்துரையாடல் நேற்று முன்தினம் நடைபெற்றது.

தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய , கொவிட் – 19 பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவர் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் வேந்திர சில்வா, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க மற்றும் பதில்பொலிஸ்மாஅதிபர் சந்தன விக்கிரமரத்ன உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலில் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் திட்டமிட்டுள்ளபடி முறையாக தேர்தலை நடத்துவதற்கு, கொவிட் – 19 கட்டுப்பாட்டுக்கான தேசிய செயற்பாட்டு மையம், பொலிஸ் மற்றும் சுகாதாரத் துறையினரின் ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இந்த கலந்துரையாடல் தொடர்பில் இராணுவ ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளதாவது:–

தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள மற்றும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு வாக்களிப்பதற்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான வழிமுறைகள் பற்றி இதன் போது அவதானம் செலுத்தப்பட்டது.

அதற்கமைய வீடுகளிலேயே சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளவர்கள் மற்றும் வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்று வருபவர்கள் வாக்களிப்பதற்காக முப்படையினரின் உதவியைப் பெற்றுக் கொள்வது பற்றியும் அரசாங்கத்தினால் செயற்படுத்தப்படுகின்ற தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நபர்களுக்கு எவ்வாறு வாக்களிப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பது என்பது பற்றியும் விரிவாக ஆராயப்பட்டது.

ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் எதிர்பாராத விதமாக வைரஸ் பரவல் தீவிரமடைந்தால் முன்னெடுக்கப்பட வேண்டிய துரித நடவடிக்கைகள் பற்றியும் இதன் போது அவதானம் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.07.2020 இல் வெளியிடப்பெற்றது.